**<u>நாள் - 06.03.2025.</u>**

# <u>O.S. 136/2013</u> P.W.1

**பெயர் திருமதி. காந்தியம்மாள்.**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)

**<u>1, 2 - ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-</u>**

நான் படிக்கவில்லை. என் கணவர் மாரநாடுடன் உடன் பிறந்தவர்கள் பத்திரகாளி, காளி, பொன்னுகிளி, வேலியம்மாள் ஆண் குழந்தைகள் சமுத்திரம், பெரியாம்பிள்ளை ஆகியோராவர். என்னுடைய கணவரான மாரநாடின் சகோதரிகளைக் குறித்த விபரங்களை எனது பிராதிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது மாமனார், மாமியார் உயிருடன் இருந்த காலத்தில் பெண் குழந்தைகளுக்கு சொத்து கொடுத்துவிட்டதால் மேற்படி விபரத்தினை நான் பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ கூறவில்லை. மாரநாடுக்கு நான் 2 வது மனைவி என்றும், இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதி பாண்டியம்மாள் தான் என் கணவரின் முதல் தாரம் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரான மாரநாடுக்கும் இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதியான பாண்டியம்மாளுக்கும் பிறந்தவர் தான் இவ்வழக்கின் 5 ம் .....

பிரதிவாதியான காளீஸ்வரி என்றால் சரியல்ல. என் கணவரான மாரநாடுக்கும், இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியான பாண்டியம்மாளுக்கும் விவாகரத்து எதுவும் நடைபெற்றதா என்றால் இல்லை. என் கணவர் அவரின் முதல் மனைவியான பாண்டியம்மாளை சட்டப்படி விவாகரத்து செய்யாமல் என்னை திருமணம் செய்து கொண்டதால் எனக்கு சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது ஆதியில் எனது மாமனார் கருப்பையா மற்றும் எனது மாமியார் முருகியம்மாள் ஆகியோர் பெயரில் இருந்தது. தாவா சொத்து நான்குமால் குறித்த விபரங்களை என் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் படிக்கவில்லை என்பதால் தெரியாது.

ஒப்பம் - காந்தியம்மாள்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/- N. Nagalakshmi.
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ),
மதுரை.